# இறைதூதன்

## Messenger of God

UNIVERSITY LIBRARY JAFFNA
09 DEC 1999
PERIODICALS DIVISION

### இம்மாதச் செய்தி

அனைத்து மதங்களின் சாரமும் அனைத்துப் புனித நூல்களின் மூலமும் அனைவரும் கடைசியில் அடைய வேண்டிய இலக்கும் ஒன்றே ! ஆனால் மனிதன் தன் சுயநலத்தினாலும் குறுகிய நோக்கினாலும் மதத்தைக் கருவி யாகக் கொண்டு கலகத்திலும் சண்டையிலும் ஈடுபடுகிறான்.

செய்திக் கட்டுரை
3ம் பக்கம்

சர்வமதப் பத்திரிகை
மார்கழி 1998
முரசு 9

மாதம் ஒரு முரசு
விலை ரூபா 10/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அருளாசிச் செய்தி"

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

அன்புசார் பெருந்தகையீர்...!

மானிப்பாய் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தீ வெளியிடும் மாதாந்த "இறைதூதன்" என்னும் பத்திரிகை வாசிப்பவருடைய மனதில் ஆன்மீக சிந்தனையை ஊட்டுவதாக அமைந்துள்ளது பத்திரிகையில் வரும் ஒவ்வொரு அமசங்களும் ஆன்மீகத் தாகம் உள்ளவர்களுக்கு மன சிநதனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது அமைதி இல்லாமல் துடித்துக் கொண்டிருக்கும், மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் தருவதான சிந்தனைக் கருத்துக்கள் மேலும் தொடர்ந்து வருவது வரவேற்கத்தக்கது இப் பத்திரிகை பல்லாண்டு காலம தொடர்ந்து வருவதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆசிகள் கூறி அமைகின்றேன்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன முதல்வர்
இரண்டாவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**

---

# வாசகர் கருத்து

## எம் இனிய தூதனே!

ஐயா, தாங்கள் பிரசுரிக்கும் இறைதூதன் பத்திரிகை மதவெறி பிடித்தவர்களையும் அதாவது பிறமதங்களைத் தூற்றுவோருக்கு அறிவு புகட்டும் ஓர் அற்புத நூலாக வெளிவந்துள்ளது. மட்டுமன்றி நல்வழிப் படுத்தும் நீதிக்கருத்துக்களையும் இனிய பல ஆக்கங்களையும் தந்திருக்கின்றது தங்களுக்கு எம் இதயம் கனிந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்.

**திருமதி ச. நந்தகுமார்**
**உபதபாலகம்**
**மாரீசன் கூடல்,**
**இளவாலை**

## சிறந்த வழிகாட்டி

இன்று எமது இளைஞர் சமூகம் சீரற்ற (தவறான) வழியில் செல்கின்றது. இதற்கான காரணம் ஓர் சிறந்த வழிகாட்டி அவர்கட்கு இல்லை என்பதே ஆகும் தடியும், பிரம்பும், பேச்சும் இல்லாமல் கற்பிக்கும் சிறந்த ஆசான்கள் 'புத்தகங்களே' என்பது மகாத்மா காந்தியின் கருத்து இவ்வாறு இளைஞர் சமூகத்தை நல்வழிப்படுத்தும் பத்திரிகையாக இறைதூதன் அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தங்கள் பணி தொடரவும் இறைதூதன் சிறக்கவும் வளரவும் பகவானின் பாதார விந்தங்களை பணிகின்றேன்.

**கனகராசா பிரசாந்தன்**
**வண்ணார் பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

# தூதுவன் கருத்து

## மதங்களின் ஒற்றுமை

**சாய்ராம்......!**

எல்லாவித நம்பிக்கைகளின் கூட்டும், உலகில் ஒற்றுமையை ஏற்படுத்துவதுமே மதம். வேற்றுமையைப் புகட்டி பிரிவினைக் கருத்தைப் போதிப்பது மதமல்ல. இன்று உலகம் முழுவதும் காணப்படும் சண்டை சச்சரவுகளுக்கான பல காரணங்களில் மதப் பூசல்களும் ஒன்றாகும்.

எல்லா மதங்களின், எல்லாப் புனித நூல்களின் சாரமும் ஒன்றே சரியான போதகர்கள் இல்லாததால் தான் இன்று உலகம் முழுவதிலும் மதத்தின பேரால குழப்பங்கள் விளைந்துள்ளது கடவுள் வைகுந்தத்தில் விஷ்ணுவாகவும கைலாசத்தில் சிவபெருமானாகவும், பரமண்டலத்தில் பரமபிதாவாகவும், அல்லா, ஜெகோவா, புத்தர் என்று வழிபாடுகள நடைபெறுகின்றது. இவையெல்லாம் மாயத்தோற்றங்களே... உண்மையில் இறைவன் ஒருவரே அவருடைய உருவங்களும் நாமங்களும்தான் பறபலவாக உள்ளது. எனபகவான் பாபா தன் போதனைகளில் திரும்பத் திருமபக் கூறியவண்ணமே இருககிறார்.

இந்த உண்மையினைக் கடைப்பிடிக்காது உலகில் சமாதானம் அமைதிவேண்டி ஜெபம, தியானம, யாகம், மந்திரங்கள் ஓதிப் பயன் இல்லை

கங்கை, யமுனை, காவேரி என நதிகள், பலவாக இருந்தாலும் அவை இறுதியில் போய் அடைவது சமுத்திரத்திலேயே

கறுப்பு, வெள்ளை, சிவப்பு, என்று பசுக்களின் நிறம் பலவாக இருநதாலும் அவை தரும் பாலின் நிறம் ஒன்றே

விளக்குகள் பலவாக இருந்தாலும் ஜோதி ஒன்றேதான்.

ஒரு குடும்பத்தலைவராக இருப்பவரின் பெயர் இந்திரன் இவரை இவரதுமகன் அப்பா என்றும், மருமக்கள் மாமா என்றும் பேரப்பிள்ளைகள் தாத்தா என்றும் அழைக்கிறார்கள். இந்திரன் என்ற ஒருவரையே இப்படி எல்லாம் அழைக்கிறார்கள்.

இது போலதான் இறைவன் ஒருவரே அவருடைய நாமங்களும் ரூபங்களும் சிவன், விஷ்ணு, யேசு, புத்தர் அல்லா எனப் பலவாக உளளது.

எனவே என்மதம் உயர்ந்தது மற்றவர் மதம் தாழ்ந்தது என்ற பேதத்தை விட்டு, நான் வணங்கும் தெய்வத்தைத் தான் மற்றமதத்தவர்கள் விஷ்ணு என்றும் சிவன், சக்தி,யேசு, புத்தர், அல்லா, என அவர் அவர் மதச்சம்பிரதாயப்படி வணங்குகிறார்கள் என்று நம்பிக்கை கொண்டு உலகில் அமைதிக்கும சமாதானத்திற்கும் வழிகாட்டிகளாவோம்.

**ஜெய்சாய்ராம்**

## முக்கிய அறிவித்தல்

சாய்ராம்!

பலரது வேண்டுகோளுக்கு தலை வணங்கி இறைதூதன் சிறுகதை கவிதைப் போட்டிக்கான கூப்பன் அனுப்புவதில் சிறு மாற்றம் செய்துள்ளோம். அதாவது "இறைதூதன் பத்திரிகையை தாங்கள் பத்திரப்படுத்தி வைப்பதால் கூப்பனை வெட்டி பத்திரிகையை வீணடிப்பதை நாம் விரும்பவில்லை."

இதற்கு ஒரு மாற்று வேண்டுமென்று கேட்டதற்கிணங்க பத்திரிகையில் உள்ளது போல ஓர் கூப்பனை தயார் செய்து நிரப்பி அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறோம்.

– ஆசிரியர் –

---

எல்லா மதங்களின் சாரமும் ஒற்றுமையன்றி வேற்றுமையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லா மதங்களும் நல்லவற்றையே போதிக்கின்றன

**- பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா -**

## அன்பின் வடிவங்களே ...... !

### கடவுள் ஒருவரே

உலகியலான பௌதீக வாழ்க்கை நிலையற்றது. இளமை உலகியலான செல்வங்கள் எல்லாம நகர்ந்து செல்லும் மேகங்களைப் போன்றவை கணநேரத்தில் மறைந்து விடும் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் இவர்களும் கூட மின்னலைப் போல் சட்டென மறைந்து விடக் கூடியவர்கள்

மனித வாழ்க்கையில் சத்யமான நடத்தை, சத்கீர்த்தி இவை இரண்டும் நிரந்தரமானவை இவ்வுலகில் மனித வாழ்க்கையைச் சீரமைக்கவும் திருத்தி வழிநடத்தவும் பலமதங்கள் உருவாயின.

வைணவர்கள் விஷ்னுவே மிகப்பெரிய கடவுள் எனவும், சைவர்கள் சிவபெருமானே உயர்ந்தவர் எனவும் காணாபத்யம் வழிநடப்பவர்கள் கணபதியே முழுமுதற்கடவுள் என்றும் நன்கு படித்தவர்களெல்லாம் வித்யைக்கு அதிபதியான சாரதாதேவியே சிறந்தவள் என்றும், இஸ்லாமியர்கள் அல்லாவே அனைவரிலும் பெரியவர் எனவும், கிறிஸ்தவர்கள் இயேசுக்கிறிஸ்து மட்டுமே ஒரே கடவுள் என வணங்குவர் புத்தரே சிறந்தவர் என பௌத்தர்களும் மகாவீரரே உயர்ந்தவர் என ஜைனர்களும் வழிபடுகிறார்கள். பாபாவின் பக்தர்கள் அனைவரும் உரத்துக்கூறுவது சாயி பாபா தான் கடவுள் என்று

ஆனால் அனைவரும் சமமே எல்லா மதங்களுக்கும் பொதுவானவர் கடவுள். அவரே சாந்தி மிகுந்தவர் அவரே சத்யம், அவரே தர்மம், அவரே அன்பு மயமானவர்.

### மதங்களின் நோக்கம்

அன்பின் வடிவங்களே......!

மனித வாழ்கையில் உள்ள வேறு பாடுகளைக் களைந்து அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி தலைசிறந்த சமுதாயமாக மாற்றுவதே மதங்களின் நோக்கம் என்கிற சத்தியத்தை உணர்ந்து புரிந்து கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும.

அனைத்து மதங்களின் சாரமும் அனைத்துப் புனித நூலகளின மூலமும், அனைவரும் கடைசியில அடைய வேண்டிய இலக்கும் ஒன்றே ஆனால் மனிதன் தன் சுயநலத்தினாலும் குறுகிய நோக்கினாலும் மதத்தைக் கருவியாகக் கொண்டு கலகத்திலும் சண்டைகளிலும் ஈடுபடுகின்றான்.

எல்லா மதங்களும் நல்லவற்றையே போதிக்கின்றன நாம் கான நல்லறிவுடன் நடந்து கொள்ள வேண்டும். நம் மனம் நல்லதாய் இருந்தால் எந்த மதம் தீமை மிகுந்தது? இதை உன்னிப்பாக கேளுங்கள்.

எல்லா மதங்களுக்கும் ஆதாரமான முக்கிய தத்துவங்கள், ஒழுக்கம், தானம், தர்மம், சத்யம் பாரம்பரியக் கலாசாரம், சகிப்புத் தன்மை மற்றும் அகிம்சை முதலானவை.

இத்தகைய உண்மைகளை எல்லா மதங்களும் அங்கீகரிக்கின்றன ஆனால் பண்டைக் காலததில் இருந்தே ஒற்றுமைகளை மறந்து விட்டு, வேறுபாடுகளையே நினைத்து மதங்கள் வளர்ந்து வந்திருப்பதால். மனித குணநலன்களே மறந்து போய்விட்டன

மனித வாழ்க்கையில் தெய்வீகத்தில் இருக்கும் ஒற்றுமையைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது

### யூதர்கள்

கிறிஸ்து பிறப்பதற்கு 350 வருடங்களுக்கு முன் யூதர்கள் வாழ்ந்து வந்தனர்- யூதர்களிடமிருந்தே கிறிஸ்துவ மதமும், இஸ்லாம மதமும் பிறந்தன, இந்த இரண்டு மதமும் பிறந்த இடம் யூதர்களின் தேசம் தான் இந்த தேசத்தில் 'ஹீப்ரு' என்ற மொழி வழக்கில் இருந்தது.

இம் மொழிக்கும் சமஸ்கிருத பாஷைக்கும் இடையே பல வகையிலும் சம்பந்தம் இருக்கிறது. ஹீப்ரு மொழியில் மனித வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகள் அனேகம் இருக்கின்றன.

அந்நாளில் மக்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர். நல்ல சிந்தனைகளுடன், இறைவன் மேல் தங்கள் எண்ணத்தை முழுமையாகப் பதித்திருந்தனர் அவர்களுக்கு வேறு சிந்தனை எதுவும் இல்லை, சில வடிவங்களை அவர்களே உருவாக்கி அவற்றை வழிபட்டு வந்தனர்.

அத் தெய்வீக வடிவங்கள் அவர்களது கற்பனையின் விளைவாகத் தோன்றியவையாயினும அவற்றின் மீது தங்களது முழுமையான பக்தியைச் செலுத்தி வந்தனர்.

அத்தெய்வ வடிவங்களில், ஆண்வடிவத்துடன் இருந்த ஒரு கடவுளின் பெயர் 'இப்ரஹீம்' யோசஃப் என்பவர் இப்ரஹீமின் சந்ததியைச் சேர்ந்தவர். அந்நாளைய யோசஃப்தான் இந் நாளைய ஜோசஃப் ஆக அழைக்கப்படுகின்றார்.

அவர்கள் பிழைப்புக்கு மரத்தச்சு வேலை செய்து வந்தனர். அதே கிராமத்தில் 'மரியா, என்ற கன்னிகை இருந்தாள், இந்த 'மரியா' தான் இந்நாளைய 'மேரி' ஜோசஃபுக்கும் மேரிக்கும் கடவுள் நம்பிக்கை மிகவும் அதிகம். அவர்கள் தங்கள் குடும்ப தெய்வமான 'இப்ரஹீம் மேல் மனதைச் செலுத்தி. இச் சிருஷ்டி எவ்வாறு ஏற்படுகிறது என்பதைப்பற்றி ஆலோசித்தனர்.

### மூன்று அரசர்கள்

காலம் செல்கையில் ஜோசப்புக்கும் மரியாவுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தையே ''யேசு''

ஜீசஸ் பிறந்த சமயம்' மூன்று அரசர்கள் அரேபியா தேசத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு கூடினார்கள் ஒருவர் நின்னந்தார் இது இறைவனின் குழந்தையைப் போல் தோற்றமளிக்கிறதே என்று.

இரண்டாமவர் நினைத்தார் இல்லை இல்லை இந்தக் குழந்தை இறைவனின் மேல் அளவு கடந்த அன்பு செலுத்தும் என்று,

மூன்றாவது அரசர் சொன்னார் ''இது தெய்வத்தைப் பிரேமிக்கும் குழந்தை என்று சொல்வது தவறு! இது தெய்வமேதான்! என்று''

### யேசு என்றால் ......

'யேசு' என்றால் என்ன? 'யே' என்றால் ஒன்று 'சு' என்றால் பவித்ரம். பவித்ரம் ஒன்றே! இவ்வுலகம் முழுவதும் இறைவன் மட்டுமே புனிதமானவன் என்ற நம்பிக்கை யூதர்களிடம் இருந்து வந்தது.

யேசுவின் பெயர் பரவ ஆரம்பித்ததும், சந்தேகங்களும் உடன் தோன்றத் தொடங்கின. இளம் வயதிலேயே யேசுவின் தந்தை மறைந்து விட்டார் தாயைப் பேராற்றும் விதமாக இயேசு சேவை செய்யத் தொடங்கினார்.

பெற்றோருக்கு சேவை செய்தல் மிகவும் முக்கியமானது ஏன்? நம்முடைய 'பணம்' உணவு இரத்தம் தலை, எல்லாம் பெற்றவர்களுடைய பரிசு தான் அல்லவா? ஆதலால் முதலில் அவர்களுக்கு நம்முடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டும் அந்நாளைய இளைஞர்களுக்கு இத்தகைய புத்திமதிகளை இயேசு கூறிவந்தார்.

### கொடூரச் செயல்கள் தடுத்தார்

தன் பதினொராவது வயதில் இயேசு ஜெருசலேம் வந்தடைந்தார். ஜெருசலேம் வந்த பிறகு இயேசுவின் தாயாருக்கு மிகுந்த மனவருத்தம் ஏற்பட்டது.

அங்கிருந்த கோயிலில் அதிகமான அளவில் கொடூரச் செயல்கள் நடந்து வந்தன அந்த ஹிம்சைகளைத்தடுத்து, இறைவன் எல்லா உயிரினங்களிலும் நிறைந்துள்ளான் என்பதைப் போதித்தார் ஜீசஸ்.

மக்களே உங்களால் உபகாரம் செய்ய முடியவில்லை என்றாலும் பரவாயில்லை அபகாரமாவது செய்யாமல் இருங்கள் என்றார்.

எல்லா மதங்களின் சாரமும் இது தான். அத்தனை மதங்களின் ஒருமைப்பாடும் இதுவே இந்தப் போதனை மனிதகுலம் முழுமைக்குமாக என எடுத்துக் கூறினார் இயேசு

அதனபடி, நோயுற்றவரின் வேதனை தீர்த்தார் பசியுற்றோருக்கு உணவு வழங்கிப் பசி நீக்கினார். இப்படிப்பட்ட உதவி புரிவதைக் கண்டவர், இயேசுவை இறைவனின் குமாரன் என அழைத்தனர்.

இதுவே படிப்படியாக இயேசு இறைவனின் மகன் என நிலைத்தது ஆனால் இறைவன் என்ற தந்தை ஒருவன் இருக்கிறான். என்பதை இது உணர்த்தியது.

11ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ மனித ரட்சகர் அவதரித்தார்

## - வரலாற்றுக்கதை -

### திருவாக்கு

இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இமானுவேல் என்று பெயர் இடுவாள். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாகும்.

ஈசா என்னும் அடிமரத்தில் இருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர். ஆலோசனைக் கர்த்தர் வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா சமாதானப் பிரபு எனப்படும்.

தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராச்சியத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற் கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும் படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதன் சமாதானத்திற்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும் என்று ஏசாயா முன்னறிவித்தான்.

என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார். இதோ கர்த்தராகிய ஆண்டவர் வருவார். மேய்ப்பனைப் போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து தமது மடியிலே சுமந்து கறவை ஆடுகளை மெதுவாய் நடத்துவார்.

'அவருடைய ஆத்மா' தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும் போது, அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாயிருப்பார். கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும் என்று ஏசாயா உரைத்தார்

### பூலோக ரட்சகரது பிறப்பு

காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய, யோசேப்பு என்கின்ற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப் பட்டிருந்த ஒரு கன்னிகையிடத்துக்கு தேவனால் அனுப்பப்பட்டான். அந்தக் கன்னிகையின் பெயர் மரியாள் அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து.

''கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்'' என்றார்.

அவளோ அவனைக் கண்டு. அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப் பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டு இருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி,

''மரியாளே, பயப்படாதே. நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு 'இயேசு' எனப் பெயரிடுவாயாக அவர் பெரியவராய் இருப்பார் உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார் கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார் அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராச்சியத்துக்கு முடிவிராது'' என்றான்.



அதற்கு மரியாள் தேவ தூதனை நோக்கி இது எப்படியாகும் கணவனை அறியேனே என்றாள் தேவதூதன் அவளுக்கு பிரதியுத்தரமாக பரிசுத்த ஆவி உன் மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும் என்றான்.

அதற்கு மரியாள், இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டும். என்று அங்குஸ்துராயனால் கட்டளை பிறந்தது அந்தப்படி குடிமதிப்பு எழுதப்படும் படிக்கு எல்லோரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

அப்பொழுது யோசேப்பும்' தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த படியினாலே தனக்கு மனைவியாக நியமிக்கப் பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப் பெழுதப்படும்படி கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் ஊரில் இருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்தலகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்.

அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது அவர் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று சத்திரத்திலே இடமில்லாதிருந்த படியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன் அணையிலே கிடத்தினாள்.

### இல்லாரும் உள்ளாரும் இரட்சகரை வணங்கல்

அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல் வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளை கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி.

பயப்படாதிருங்கள் இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்

அந்த கணமே பரம சேனையின் திரள் அந்தத் தூதனுடனே, தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும. மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்.

> நகைகள் வெவ்வேறாயினும் தங்கம் ஒன்றே அது போன்று ரூபங்கள் நாமங்கள் ஆகியன வெவ்வேறாயினும் தெய்வம் ஒன்றே.
>
> - பாபா -

தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்திற்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி நாம் பெத்லகேம் ஊருக்குப் போய் நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய் வந்து மரியாளையும் யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்

மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின் படியே கேட்டுக் கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள்.

ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எரிசலேமுக்கு வந்து யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப்பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்,

இதோ அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளையிருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது.

அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து பிள்ளையையும் அதன் தாயாராகிய மரியாளையும் கண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டு தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்கு காணிக்கையாக வைத்தார்கள்.

அனைத்து உயிர் மீதும் அன்பாக இருத்தலே உண்மை மதமாகும். - புத்தர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் கவனிக்கிறார்

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

மனிதன் வாழ்க்கை பயணத்தில் நடப்பதற்கு வழியை வகுத்துள்ளார் இறைவன். மனிதனோ தன் மடமையினால் அவ்வழியை விட்டு விலகிச் செல்கிறான். பயணிகள் அனைவருடைய நடைகள் எல்லாவற்றையும் இறைவன் கவனிப்பதை அவர்கள் அறிவதில்லை.

இதனை மனிதன் உணர்ந்து நல்வழியில் கவனத்துடனும் நேராகவும் உண்மையாகவும் நடப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும் ஒருவன் தன்னை இறைவனிடம் அர்ப்பணித்துக் கொள்ளும் போது இறைவனே அவனுக்கு வழிகாட்டியாய் அமைந்து அவனை ரட்சித்து அவன் இலட்சியத்தை அடைய அவனுக்கு உதவி செய்கிறார்,

# இரு நற்பண்புகள்

1 உமக்கு அநீதி இழைப்பவரை நீர் மன்னித்துவிடும் உம்முடன் உறவை முறித்துக் கொள்பவருடன் உறவு கொள்ளும். உமக்குத் தீங்கு இழைப்பவருக்கு நீர் நன்மையே செய்யும் உமக்குத் தீமை பயப்பதாக இருப்பினும் உண்மையே உரையும்.

2. நிச்சயமாக உம்மில் இரு நற்பண்புகள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ்வும் அவனது ரசூலும் நேசிக்கின்றனர் அவை (1) பொறுமையைக் கடைப்பிடிப்பதும், (2) உலக விவகாரங்களில் தாமதிப்பதும்

# கடனாளிக்கு சுவர்க்கம் இல்லை

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு ஒரு ஜனாஸா கொண்டு வரப்பட்டது. ஜனாஸா தொழுகையை நடத்தி வைக்குமாறு மக்கள் கேட்டுக் கொண்டனர்.

மரணித்த இந்த மனிதர் எவரிடமாவது கடன் பெற்று அதை நிறைவேற்றாது விட்டு இருக்கிறாரா? என்று நபிமணி (ஸல்) அவர்கள் அங்கிருந்த மக்களிடம் கேட்டார்கள்.

அவர்கள் ஆம் என்றனர் கடனாளியாக இருந்து மரித்தவருக்கு ஜனாசா தொழுகை நடாத்தவேண்டாம் என இப்ரீம் அலைஸலாம் அவர்கள் எனக்குப் பணித்திருக்கிறார்.

கடனாளியான நிலையில் ஒருவர் மரணித்தால் அவர் சுவர்க்கம் செல்லாது தடுக்கப்படுவார், எனவே கடனாளியான இந்த மனிதரின் ஜனாசா தொழுகையை என்னால் செய்யமுடியாது என மறுத்து விட்டார்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாகு சலைம் அவர்கள்.

* * *

## "இறைதூதன் சர்வமத மாத வெளியீடு

### சிறுகதை, கவிதைப் போட்டிகள்

இறைதூதன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட ஆண்டு நிறைவை (06 – 04 - 1999) முன்னிட்டு இரு பிரிவுகளாக நடாத்தப்படும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்.

முதலாவது பிரிவு:- 8 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்டோர்.

இரண்டாவது பிரிவு:- 16 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்டோர்.

மனித மேம்பாட்டுக் குணங்களான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை, இவற்றை உள்ளடக்கியதாக உங்கள் கதைகளும் கவிதைகளும் எழுதப்பட வேண்டும்.

---

"இறைதூதன்" சர்வமத வெளியீடு
கதை, கவிதை போட்டிக் கூப்பன்

கதை / கவிதையின் பெயர்: ..............................

எழுதியவர் பெயர்: ..............................

புனை பெயர் (இருந்தால்): ..............................

வயது: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

திகதி: ..............................

கையொப்பம்: ..............................

மாணவராயின் பெற்றோர் அல்லது வகுப்பாசிரியர் கையொப்பம்: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

---

### போட்டி விதிமுறைகள்

1. கதைகள், கவிதைகள் "வெள்ளைத்" தாளில் தெளிவான கையெழுத்தில் ஒரு பக்கம் மாத்திரம் எழுதப்பட வேண்டும்.
2. சிறுகதைகள் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும், கவிதைகள், 20 வரிகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. நாட்டின் எப்பாகத்திலுமுள்ள எல்லாமதத்தைச் சார்ந்தவர்களும் பங்குபற்றலாம்.
4. ஆக்கங்கள் நேரிலோ சாதாரண தபால் மூலமோ அனுப்பலாம்.
5. கதைகள், கவிதைகள் சொந்தக கற்பனையில் உதித்தவையாக இருக்க வேண்டும். வேறு பத்திரிகைகளில் வெளிவந்ததாகவோ வேறு போட்டிக்கு அனுப்பியதாகவோ இருக்கக் கூடாது.
6. இங்கு வெளியாகியுள்ள கூப்பனை நிரப்பி வெட்டி உங்கள் ஆக்கங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
7. தகுந்த பரிசுகள் வழங்கப்படவுள்ளது.
8, அனுப்பும் கடித உறையின் மேற்பக்கத்தில் "சிறுகதை கவிதைப்போட்டி" க்கான சிறுகதை அல்லது கவிதை எனக்குறிப்பிடவும்.

போட்டி முடிவு திகதி
30 – 01 – 1999

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர் இறைதூதன்
மானிப்பாய் சத்ய சாயி நிலையம்
ஹலக்லேன், மானிப்பாய்.

---

உன் செயலகள் அனைத்துக்கும் நானே நேரடி சாட்சி - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமலர்கள்

## யாருக்கு சாந்தி இராது?

புலன்களைத் தன் வசம் கொள்ளாதவன்
தூய மனதை அடைய முடியாது
தூய மனம் இல்லாதவனுக்கு
தெய்வீக உணர்வுகள் இராது
தெய்வீக உணாவுகள இலலாத போது
ஆத்மசாந்தி இராது.
ஆத்ம சாந்தி இல்லாத போது
அவனுக்கு சாந்தி இராது.

—பாபா—

## பூவில் பாரம் சுமக்கும் பாவியே

பாரினில் பாவந்தனைச் சுமந்து
மனம் வேதனையால் நொந்து
வாழ்வுதனை வெறுத்து
ஏன் துன்பம் என வினவும்
பாவியே நீ வா இறையண்டை !

என்றுமே கண்விழித்து
உன்மேல் கருணையுடன்
பாவப்பழி சுமக்கின்றேன்
நீ ஏன் கலங்குகின்றாய்
இன்பம் பெற கிறிஸ்துபாதம் வா!

கரங்களை உனக்காக விரித்து
கண்ணீர்வடிக்கும் உனை பார்த்து
அன்பாய் அரவணைக்கும்
தன்னையே உன் பாவத்திற்காய்கொடுத்த
அன்பு நிறை இயேசுவண்டைவா!

மாந்தர் உன்னை
மன்னிக்க மறுத்துவிட்டார்
என எண்ணி மனங் கலங்காதே
மாட்சிமை மிகு இறைவன்
எவரும் தாரா மன்னிப்பு தருவார் வா!

—ஷாமிலா—

★ ★ ★



## கண்ணா! விரைந்து வாராய்!

செம்பொற் பாதமும் அழகிய வண்ணப் பட்டும்
இனிய ஓசை எழுப்பும் குழல் கொண்ட கரமும்
அழகிய புயங்களும் செவ்விதழ்களும்
ஒளிவீசும் கமல நயனங்களும் கருணை பொழியும்
பார்வையும் அழகிய மணி மகுடமும்
நீல மேனியும் கொண்ட கண்ணா! கார்மேக வண்ணா!
எம்மைக் காக்கும் பரம் பொருளே
எம் துயர் நீக்க விரைந்து வாராய்!

செ. றாணி

## கடவுளை மறவாதே

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து விடாதே
பணிவாய் இரு ஆனால் கோழையாகி விடாதே.
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்பட்டு விடாதே.
சிக்கனமாக இரு ஆனால் கஞ்சத்தனமாகி விடாதே.
வீரனாய் இரு ஆனால் போர் வீரனாகி விடாதே.
சுறு சுறுப்பாய் இரு ஆனால் பதட்டப் பட்டு விடாதே.
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே.
பொருளைத் தேடுஆனால் பேராசைப் பட்டு விடாதே.
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறவாதே.

—ஜெ. கலையரசி—

★ ★ ★

## உன்னுள் உறங்கும் மனிதம்

விடிந்தும் விழியாத
விழிகள் போன்ற இருள் நிறைந்த
இதயத்துள் இறைவனைத் தேடாதே மனிதா!
மாசற்ற மனமொன்றை
மலரவைத்த பின்பு தேடு
புலர்ந்து நிற்கும் புது மனிதம் உன்னுள்
திருமொழியில் தூய்மை வை.
தினமும ஒரு நன்மை செய்
அன்பென்ற உளி கொண்டு
அகம் தன்னை நன்றே வை
உன் இதயம்
அன்பின் இமயம்
முகில் வழியும் வானம்
அது முகம் பார்க்கும் நிலவு.
மொட்டவிழும் மலர்கள் – அதில்
எமட்டமைக்கும் வண்டு
வீசுகின்ற காற்று – அது
பேசுகின்ற நாற்று – என
எல்லாமே ஒரு சக்தியின்கீழ்
சங்கமிக்கையில்
நீ மட்டும் ஏன் சாக்கடைகளைச்
சல்லடை போட்டு
சலனித்துப் போகிறாய்
ஆழ்ந்த மௌனமும்
அசையாத தியானமும் தவமும்
தூங்காத தூய்மை நிறை
ஆன்மீகத்தில் மூழ்கிப்பார்
அங்கு தான் உன்
நிர்மூலமாகாத நிர்மலரூபன்
நிசப்தத்தின் பின்னணியில்.

– தெய்வீகன் –



பக்தரின் இதயமே இறைவன் உறையும் உறைவிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறுவர் கருத்துக் குவியல்

### புனிதமான பத்திரிகை

இறைதூதன் சர்வமதச் சமத்துவப் பத்திரிகையை அப்பா வாங்கி என்னிடம் தந்த போது அதனை பவுத்திரமாக ஒவ்வொரு பக்கம் பக்கமாக ஒவ்வொரு எழுத்து எழுத்தாக வாசித்து ஆனந்தமடைந்தேன், சின்னஞ்சிறிய குழந்தைகளுக்கு ஏற்ற ஒரு புனிதமான பத்திரிகை பாபாவின் கருத்துக்களை ''சாக்கடைத் தண்ணீரும் சமுத்திரமும்'' எனும் அம்சம் தெளிவாகப்புரிய வைத்திருப்பது மனதிற்கு இதமளிப்பதாக அமைந்திருந்தது. குட்டிக் குட்டி எழுத்துக்களால் எம்மைத் தலை வணங்க வைத்துள்ளீர்கள்.

மாதந்தோறும் கற்பதற்கான ஆவலைத்தூண்டி விட்டீர்களே! பாபா எமது வீட்டிற்கும் வந்து விட்டார், ஆனால் ஒன்று எமது சொந்த வீட்டிற்குப் போகமுடியவில்லையே.

பணிவுள்ள மாணவி
**வலஜி சிவஞானராஜா**
ஆண்டு 5,
யா / உடுவில் அ. மி. த. க. பாடசாலை

## சிறுவர்களை ஆசிர்வதித்த யேசுநாதர்

ஒரு நாள் சிலர் யேசுநாதரிடம் சிறு பிள்ளைகளை அழைத்து வந்தனர் குழந்தைகள் மீது இயேசுநாதர் கைகளை வைத்து ஆசீர்வதிக்க வேண்டும் என்று விருப்பினர்

ஆனால் யேசுவின் சீடரோ குழந்தைகளை அழைத்து வந்தவர்களை அதட்டினர்.

உடனே யேசுநாதர், ''சிறுவர்களைத் தடுக்க வேண்டாம் அவர்களை என்னிடம் வர விடுங்கள் சிறுவரைப போல கடவுளிடம் வருபவர்களுக்கு கடவுளே அரசராக இருப்பார்'' என்றார்.

பின்பு யேசுநாதர் தமது கைகளை சிறுவர் மேல் வைத்து அவர்களை ஆசிர்வதித்தார். இச் சிறுவர்களை இயேசு ஆசீர்வதித்தது போல கர்த்தர் எம்மையும் ஆதரிக்கிறார். கர்த்தர் எம்மை எவ்வளவு நேசிக்கிறார என்பதை யேசு எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்

## இயற்கையே குரு

ஆறறிவுள்ள மனிதருக்கெல்லாம்
அறிவு புகட்டும் இயற்கையே
எங்கள் குரு இயற்கையே
இயற்கையைப் பார்த்துப் பழகிடுவோம்
தினமும் நாங்கள் கண்விழிக்கும் முன்னே
துள்ளி எழுந்திடும் சூரியனே
இனிமேல் நாமும் உன்னைப் போல்
எழுந்திடுவோம் அதிகாலையிலே
தேனி தேனினைச் சேர்ப்பது போல்
நாமும் நல்லதைச் சேர்த்திடுவோம்
பறவை போல் பறந்து திரிந்து
பார்த்திடுவோம் நம் வேலைகளை
எறும்பைப் போல சுறுசுறுப்பாய்
என்றும் நாங்கள் இருந்திடுவோம்
காகத்தைப் போல ஒற்றுமையாய்
நாமும் சேர்ந்து வாழ்ந்திடுவோம்.


**மிருஜா குலேந்திரன்**
யா / கொக்குவில் இந்துக்கல்லூரி

## தேனீயே

சின்னஞ் சிறிய தேனீயே
காலை எழுந்து பறக்கின்றாய்
சின்னப் பூக்கள் மலருமென்று
சிறகு விரித்துத் திரிகின்றாய்

தேனை நீயும் குடித்துவிட்டு
நன்றாய் சேர்த்து வைக்கின்றாய்
ஆறறிவு உள்ள மனிதருக்கெல்லாம்
அள்ளித் தேனை கொடுக்கிறாய்

பக்குவமாய் தேனை சேகரிக்கும் – உன்
பணியை நானும் மெச்சுகிறேன்
உன்போல் நானும் எல்லோர்க்கும்
உள்ளத்தில் பகிர்ந்து கொடுத்திடுவேன்



**தனுஜா குலேந்திரன்**
யாழ் இந்து மகளிர் கல்லூரி

* * *

## உங்களுக்குத் தெரியுமா?

கேள்வி:- சிறந்த அறம் எது?
பதில்.- பசித்தோர் முகம் பார்த்து இரங்கும் பண்பு

கேள்வி:- தந்தை மகனுக்கு கொடுக்கும் செல்வம் யாது?
பதில்:- ஒழுக்கம்

கேள்வி:- இரக்கமுடைய நெஞ்சில் எவை தோன்றாது!
பதில்:- பகை, பொறாமை

கேள்வி.- மதம் என்பது யாது?
பதில்:- தர்மம் என்பதே மதம்

கேள்வி: பகவான் என்பவர் யார்?
பதில்;- ஞானம் வைராக்கியம் வீரியம் ஐசுவரியம் ஸ்ரீ கீர்த்தி இவ்வாறு ஒருவனிடம் சேர்ந்து இருத்தல்

கேள்வி;- பதவி என்பது யாது?
பதில்;- மக்களுக்கு பணியாற்ற கிடைக்கும் சந்தர்ப்பமே தவிர அதிகாரங்களை பிரயோகிக்க கொடுக்கப்பட்ட உரிமை இல்லை.

கேள்வி:- அன்பு இருக்கும் இடத்தில் எது உண்டு?
பதில்:- தொண்டு இருக்கும்

கேள்வி;- மனிதன் செய்ய வேண்டியவை எவை?
பதில்;- நல்லதை காண், நல்லதை கேள், நல்லதை செய் அல்லாதவற்றை செய்யாதொழிக.

S. ஜெயரட்னராசா
யாழ்ப்பாணம்

உனது வார்த்தைகளை தேனைப் போல் இனிமையாக்கு.

# பாலன் தேடிய சத்திரம்

நீல வான்கடலில் பொன் ஒளி தனை பரப்பி கதிரவன் தன் மனைவியாகிய காலைப் பொழுதை துயில் எழுப்புகின்றான். மாந்தர் யாவரும் கண்விழிக்கின்றனர். அன்றையநாளின் தேவைகளை நினைத்து எத்தனையோ உள்ளங்கள் ஏங்கிக் கொண்டிருந்தன அன்றுதான் பாரினில் பாவம் தீர்க்க பரமதேவன் மைந்தன் பாலனாகப் பிறந்த நாள். அந்த நாளை எத்தனையோ கோடி மக்கள் குதூகலத்துடன் எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். ஒரு மாதம் முன்பே இதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவை யாவும் பணம் படைத்த மக்களுடைய நிலைகளே அந்த எதிர்பார்ப்பின் நாள் இன்று மலர்ந்து விட்டது. எல்லோருடைய மனதிலும் அளவற்ற பூரிப்பு.



இப்பாலன் பிறப்பை தாமும் இன்பமாக கழிக்க வேண்டும் என்ற வாஞ்சை ராமுவின் மனதில் முன்னமே உதிர்த்து விட்டது. ஆனால் அவன் கூலிவேலை செய்பவன், அன்றன்றாடு அவன் பெறும் பணம் அன்றைய நாளின் சாப்பாட்டுக்கே போதுமானது

அவனுக்கு சந்திரா, மோகன், என்னும் இரு புதல்வர்கள். அவர்கள் மனதிலும் ஏனைய பிள்ளைகளைப் போன்று புதிய ஆடை அணிந்து தமது நண்பர்களுக்கு விருந்து பண்ண வேண்டும் என்ற ஆசை ஆனால் தமது குடும்ப நிலைமை உணர்ந்து அவர்கள் ஆசைகளை அடக்கிக் கொண்டனர்.

தனது பிள்ளைகளின் ஆசைகளை ராமு நன்கு அறிவான் ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இருந்தும் பாலன் பிறப்பு அன்று நல்ல சோறு கறியையாவது உண்போம் என எண்ணி ராமு ஒரு மாத காலமாய் ஒவ்வொரு நாளும் கிடைக்கும் சம்பளத்தில் பத்து ரூபாவை ஒதுக்கி வைத்தான் ஈற்றில் அவனுக்கு மூந்நூறு ரூபாய் கிடைத்தது. அதை அவன் வைத்த இடத்தில் இருந்து எடுக்கும் போது கர்த்தருக்கு நன்றி சொன்னான். ராமுவின் மனைவியாகிய கமலாவும் ஏழ்மையிலும் இல்லறத்தை செம்மையாக வழிநடத்தி வந்தாள்.

ராமு சமையல் பொருட்களை வாங்குவதற்காக கமலாவுடன் சந்தையை நோக்கி சென்று கொண்டிருக்கிறான். அன்று அவன் துன்பத்திலும் ஒரு இன்பம் இருந்தது. இன்றாவது எனது பிள்ளைகள் மகிழ்வுடன் சாப்பிடுவார்கள் என்ற இன்பமே. கையில் இருக்கும் முந்நூறு ரூபாவுக்கும் கணக்குப் போட்டபடி செல்கின்றனர்.

சந்தையின் வாயிலில் இரண்டு மாதக் குழந்தையை கைகளில் ஏந்திய வண்ணம் ஒரு தாய் கண்ணீருடன் வீற்றிருக்கிறாள் குழந்தை பசி பொறுக்க முடியாமல் அலறுகின்றது. இது ஒருவரது செவிகளிலும் விழவில்லை.

ராமுவின் கண்கள் எங்கிருந்தோ இக் காட்சியைக் கண்டு விட்டன. உள்ளம் உருகியது இரக்கம் பெருகியது. கமலாவையும் அழைத்துக் கொண்டு அத்தாயிடம் வந்தான். தாயின் பரிதாப நிலையைக் கண்ட கமலாவின் மனம் பாசத்தில் துடித்தது. தமது தேவையையும் ஏழ்மையையும் இருவரும் மறந்தனர்.

## ★ சிறுகதை ★

அருகில் இருந்த கடைக்கு இருவரும் விரைந்து சென்று பிள்ளைக்கு பால்மாவும் தாயாருக்கு உண்ண உணவும் வாங்கிக் கொண்டுவந்து உள்ள மகிழ்வுடன் தாயிடம் கொடுத்தனர். வேதனையின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. உள்ள நன்றியுடன் அவர்களை நோக்கினாள். தாயின் உள்ளத்தில் அன்று ஒரு மகிழ்ச்சி.

தமக்குத் தேவையான பொருட்களைவாங்க கடையினுள் நுழைந்த ராமு. காசுப்பையினுள் காசைப்பார்த்தான். மீதியாய் இருந்தது ஐம்பது ரூபாய். ஆனரல் அவன் கவலைப்படவில்லை மாறாக முன்னைய மகிழ்ச்சியை விட அவனது உள்ளத்தில் இரட்டிப்பான. மகிழ்ச்சி

★ சி. மேரி ★

தம்மிடம் உள்ள பணத்திற்கு பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு சென்றனர் அன்று அவர்கள் வீட்டில சோறும் சொதியும் தான் ஆனால் அவர்கள் உள்ளத்தில் பாலன் பிறந்திருந்ததால் குதூகலம். பாலன் தான் பிறப்பதற்கு தேடிய சத்திரம் இதுதான்.

இதே போல் தான் இன்றும் எத்தனையோ மக்கள் தமது குதுகலத்திற்காக எத்தனையோ ஆயத்தங்களுடன் பாலன் பிறப்பின் பண்டி

1 ம் பக்கம் பார்க்க

## ஒரு உலகப்புகழ் பெற்ற பிரார்த்தனை

தேவா!

என்னை உன் அமைதியின் கருவியாக்கு எங்கே வெறுப்பு தோன்றுகிறதோ அங்கே அன்பை விதைப்பேன், எங்கே மனப்புண் ஏற்பட்டிருக்கிறதோ அங்கே மன்னிப்பை விதைப்பேன்,

சந்தேகம் உள்ளபோது நம்பிக்கையை
சஞ்சலம் தோன்றுமிடத்து நல்ல காலம் வருவதை
இருள் சூளுமிடத்து ஒளியை
துயரத்தில் மகிழ்வின் விதைகளை

ஓ .. என் தெய்வ தலைவனே!

ஆறுதல் படுத்தப் படுவதை விட ஆறுதல் அளிக்கும் பணிக்கு என்னை ஆளாக்கு பிறர் என்னை புரிந்து கொள்ள வேண்டும், என்ற எண்ணத்திற்கு மாறாக பிறரை புரிந்து கொள்ள வழிகாட்டு.

அன்பு செலுத்த வேண்டும் என்பதில் ஆசைப்படுவதைவிடப் பிறருக்கு அன்பு செலுத்தும் பணியில் என்னை ஆளாககு.

ஏனெனில்
கொடுப்பதில் பெறுகிறேன்
மன்னிக்கும் போது மன்னிக்கப்படுகிறேன்.
சாவதில் தான் அமரத்தன்மை அடைகிறேன்.

(இது இத்தாலி நாட்டிலுள்ள அசிசி என்னும் ஊரில் பிறந்த ''கெயிண்ட் பிரான்சிஸ்'' அவர்களின் பிரார்த்தனை)

தொகுப்பு
க. இந்திரகுமார்.
கொடிகாமம்.

கரங்களுக்கு அழகு தானமே - பாபா -

# பாபா சொன்ன இராமாயணம்

## அத்தியாயம் - 9

சென்ற இதழ் தொடர்ச்சி

### மாரீசன் சுபாகு

பின்பு அங்கு தாடகியின் மைந்தர்கள் ஆகிய மாரீசன், சுபாகு என்ற அரக்கர்கள் தோன்றினார்கள். இராமர் மாரீசன் மீது செலுத்திய அம்பினால் அவன் தள்ளப்பட்டு நூறுமைல் தொலைவிலுள்ள கடலில் விழுந்தான் சுபாகு இராமர் செலுத்திய அம்பினால் அங்கேயே மரணமடைந்தான்.

### யாகம்

சித்தாசிரமத்தில் அமைதி நிலவியது பின் களிப்பும் கோலாகலமும் அங்கு நிறைந்தன முனிவரும் மாணவரும் மிகுந்த மகிழ்ச்சியுற்றனர் இது நாள் வரை இந்த அளவுக்கு மகிழ்ச்சியடைந்ததில்லை என்று கூறி இராமனை வணங்கினர்.

''இராமா. நீ எங்கும் நிறைந்தவன் அனைத்து ஆற்றலும் பெற்றவன். சிறு பருவத்திலேயே யாரும் செய்ய இயலாத செயலை செய்து முடித்தாய் நீ ஸ்ரீமத் நாராயணனே தான்! விசுவாமித்திரர் யாகததை தொடங்குவதறகாக இரண்டாம நாள் யாகதீட்சை பூண்டார். ஒரு இடைஞ்சலுமின்றி யாகம நடந்தேறியது.

ஐந்தாம் நாள் பூரண ஆகுதி அளிக்கப்பட்டது. வாக்குறுதி அளிததபடி, இராம இலடசுமணர் ஒய்வில்லாது யாகத்தில் இடையூறு ஏறபடா வண்ணம் காவல் காத்து வந்தனர். யாகம் முடிவுறும் வரையில் நாம் ஓய்வெடுக்லாகாது என உறுதி பூண்டனர். இது உறுதிப்பாடு எனப்படுவது. கொடுத்த பணி நிறைவேறும் வரை. அன்ன ஆகாரமின்றி. தூக்கமின்றி. ஒய்வு ஒழிச்சல் இன்றி இரவும பகலும் கண்ணுங் கருத்துமாய் யாகத்தைக் காத்து வந்தனர். ஐந்தாம நாள் ஒரு குறைவுமின்றி யாகம் நடந்தேறியது.

### சிவதனுசு

ஆறாவது நாளன்று விசுவாமித்திரர் ஆணைப்படி சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு, பின் அயோத்திக்கு திரும்ப எண்ணம் கொண்டார்.

இற்தகிடையில் மிதிலை நகரிலிருந்து அரசர் ஜனகர் சிவதனுசு யாகம் நடக்கவிருப்பதாக சேதி அனுப்பியிருந்தார், விசுவாமித்திரர், இராம இலட்சுமணர்களை நோக்கி, நீங்கள் சிவதனுசைக்காண மிதிலை செல்வது மிகப் பொருத்த மானதே என்று கூறினார்.

இங்கு நாம் இராமன் இலட்சிய முறையில் நடந்து கொண்ட விதத்தை நன்கு கவனிக்க வேண்டும். இராமன் அதற்கு ''சுவாமி நாங்கள் இங்கு யாகததைக் காப்பதற்கே தந்தையால் அனுபபப்பட்டோம். மிதிலை நகருக்குச் செல்ல எங்களுக்கு அனுமதி இல்லை. நாங்கள் எங்கள் தந்தையின் வாக்கைக் காபபாற்ற இங்கு வந்திருக்கின்றோம். வேறு எந்தக் காரணத்துக்கும் தந்தை எங்களை அனுப்பவில்லை தந்தையின் உத்தரவு இல்லாது ஓரடி கூட எடுத்துவைக்க எங்களால் இயலாது'' என்றான்.

விசுவாமித்திரரும் சாதாரணமானவர் அல்ல. ''உங்கள் தந்தை உங்களுக்கு என்ன உத்தரவு பிறப்பித்தார்? இந்த முனிவரைப் பின் தொடர்ந்து செல்லுங்கள் இவர் கூறியதைப் பின்பற்றுங்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காதீர்கள்'' என்று கூறினாரல்லவா.

உனது தந்தையின் ஆணையை மறந்து விட்டாயா. யாகத்தைப் பொருத்த மட்டும் அல்ல மற்ற எதைப்பற்றி நான் கூறினாலும் கீழ்படிய வேண்டுமல்லவா தந்தையின் ஆணையை மறந்து விட்டாயா? என்று கூறியதும் இராமன் பேசாமலிருந்தார். அப்போது விசுவாமித்திரர், தண்டகா, தர்மகா, விஷ்னு பிரம்ம அஸ்திரங்களை இராமனுக்கு அளித்தார். பின்பு மிதிலை நோக்கிச் மூவரும் சென்றனர்

### கௌதம முனிவர்

விசுவாமித்திரர் அவர்களுக்கு கடந்து செல்லும் வனத்தின் விவரங்களைப்பற்றிக் கூறினார், இது வாமணர் பிறந்த இடம். வளர்ந்த இடம் என்று கூறி பகவான் நாரயணனைப் பற்றியும் கூறிக்கொண்டே வந்து கௌதம முனிவரின் ஆச்சிரமத்துக்கு வந்தார்கள்.

அகல்யை சபிக்கப்பட்ட இடம் அவள் கல்லாக சபிக்கப்படடாள் என்று கூறுவர். உண்மையான இரகசியம் வேறு அவள் உயிர்ப்புடன் கல் போல இருந்தாள் அவளைச்சுற்றி கொடிகள் மண் அனைத்தும் படர்ந்தன. அவள் ஒரே இடத்திலேயே இருந்ததால் கல்போலத் தோன்றினாள் அனைத்து மறிந்த இராமனுக்கு இது தெரியும் ஆனால் தெரியாதவர் போல நடித்தார்.

### அகல்யை

அந்த இடம் வந்ததும் 'இலட்சுமணா!' இங்கு நாம் ஒய்வு எடுத்துக் கொள்ளலாம். என்று கூறினார். விசுவாமித்திரரும் உடன் பட்டார், அவள் இருந்த இடத்துக்குச் சென்றார்கள். அவள் மேல் பாதம் படவில்லை. கமல மலர்ப் பாதங்களின் அதிர்வுகள் அருகில் வந்து அவள் உணர்வுகளைத் தட்டியெழுப்பின உடனேயே அவளிடம் அசைவுகள் ஏற்பட்டன அவள் இராமனது தாமரைப் பாதங்களைப் பற்றிக் கொண்டாள்.

உடனே இராமன் அதிசயப்பட்டவர் போல நடித்தார் இராமனுக்கு அவள் அகல்யா என்று தெரியும் அவர் மனிதனாக உலவ வேண்டுமே தவிர கடவுளாக உலவுதல் ஆகாது. வலுவான சங்கற்பத்துடன் அவ்வாறு நடந்து கொண்டார்.

### நடப்பதனைத்தும் நல்லதற்கே

அகல்யா தனது தவறுக்காக வருந்தி தன்னை மன்னித்து அருளாசி வழங்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள் அதே சமயத்தில் கௌதமமுனிவரும் அங்கு வந்து சேர்ந்தார்.

அவர் இராமனைக் கண்டதும் அவர் ஸ்ரீமத் நாராயணனே என்றறிந்தார். காரணமின்றிக் காரியமில்லை. விதையின்றி மரமில்லை நிகழ்வுகள் அனைத்தும் ஏதாவது ஒரு காரணம் இருந்தே தீரும். நடப்பனைத்தும் நல்லதற்கே எது நடந்தாலும் அது நல்லதாகவே முடியும். இந்த உபதேசம் உலகினுக்கு அளிக்கப் பட்டது.

இராமன் அனைத்தும் அறிந்தவர் ஆயினும் ஒன்றும் அறியாதவர் போல நடித்தார் கௌதமரும் உடன்வர மிதிலாபுரிக்கு வந்து சேர்ந்தார் இராமனும் இலட்சுமணனும் சிங்கங்கள் போன்று நடந்து செல்வதைக் கண்டு மிதிலாபுரி மக்கள் அதிசயங் கொண்டனர்.

### நாரதர்

விசுவாமித்திரர் அரசர் ஜனகரிடம் தசரத புத்திரர்களான இராம லட்சுமணர்கள் என்கூட வந்திருக்கிறார்கள். என்று கூற அரச குமாரர்களுக்குரிய கௌரவம் அவர்களுக்கு அளிக்கப் பட்டது நாரதரும் அங்கு வந்திருந்தார். தனக்குள் இவ்வாறு நினைத்துக் கொண்டார்

நாராயணா! இந்நாட்டு மக்கள் இத்தகைய தரிசனம் கிடைக்கும் பேறு பெற்றனரே உம்மை இவ்வாறு தரிசிக்க நேர்ந்த நான் எவ்வளவு பாக்கியசாலி.

### தெய்வீக வல்லமை

மறுநாள் நூற்றுக்கணக்கான மக்கள் சிவதனுசை இழுத்துக் கொண்டு வந்தரர்கள் பரந்த இடத்தில் சிவதனுசு வைக்கப்பட்டது. பல அரசர்கள் அதை உடைக்க முயற்சி செய்தார்கள்.

உண்மையில் அவர்கள் அதை உடைக்க வேண்டுமென்று முயற்சி செய்யவில்லை அந் நிபந்தனையை நிறைவேற்றி, சீதையைத் திருமணம் செய்து கொள்ள வந்திருந்தார்கள் உண்மையான ஆசை நிராசையாக மாறிவிட்டது

இராம இலட்சுமணருக்கு எந்த ஆசையும் இல்லை வேறு எந்த உறுதியான எண்ணமும் இல்லை அவர்களிடம் அகங்காரமும் இல்லை அவர்கள் மற்றவர்களுடன் கூட அமர்ந்திருந்தார்கள். விசுவாமித்திரர் இராமனைக் கண்டார்

''இராமா, இவ்வில்லை முறிக்க முடியுமா இராமர் புன்னகை புரிந்தார். இந்தச் சிறிய பணியை எனக்குக் கொடுக்கிறாரே! விசுவாமித்திரர் எனது திறமையைப் பரிசோதிக்கிறார் இதுவே மாயை,, என்று நினைத்து இடத்தை விட்டு நகரவில்லை.

இராவணனும் அங்கு வந்திருந்தான். தனது புஜபல பராக்கிரமத்தை வெளிக்காட்டினான். அவ்வில்லை அவனால் அசைக்க முடியவில்லை. கீழே வீழ்ந்தான். இதன் அவமானததை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை ஆணவம், பொறாமை, வெறுப்பு இவற்றைக கொண்ட எவனும் அவமானமடைந்தே தீர வேண்டும். அகங்காரம் பொறாமை கொணட இராவணன் இங்கு அவமானப்பட்டான். அனைவரும் நகைத்தனர்.

தொடரும்

எலலோருக்கும் நன்மை செய்யுங்கள் புகழ்பட வாழுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் சைவமும் வளர்த்த நாவலர் பெருமான்

ஈழ நாட்டில் சைவமும் தமிழும் ஏற்றம் குன்றி நின்ற காலத்திலே, யாழ்ப்பாணத்து நல்லூரிலே நாவலர் பெருமான் என்ற ஞான சூரியன் தோன்றினார். அவரது வருகையால் சைவமும் தமிழும் ஏற்றமும், வாழ்வும் பெற்றன.

இவர் கந்தப்பிள்ளைக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாக 1822ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ம் திகதி பிறந்தார். இருபாலை சேனாதிராய முதலியாரிடம், நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேறினார். ஆங்கிலத்திலும் வடமொழியிலும சிறபபுத் தேர்ச்சி எய்தினார்' கிறிஸ்தவ வேதத்தை தமிழில் மொழி பெயர்த்தார்.

அவரது காலத்தில பழமையும் பெருமையும் நாகரிகமும் வாய்ந்த தமிழ் மொழியும் சைவமும் அடைந்துள்ள தாழ்விலை எண்ணி வருந்தி, இரண்டினதும் வளர்ச்சிக்காகத் தமது வாழ்வை அர்ப்பணஞ் செய்ய முனைந்தார்

நாவலர், சைவசமயத்தை வளர்ப்பதற்குக் கையாண்ட மூதல் வழி சைவப்பிரசங்கமாகும். கிராமங்கள் தோறும் சொற்பொழிவுகளை நடாத்தி மக்களிடையே புதியதொரு விழிப்புணர்ச்சியை ஊட்டினார் அதனால் சைவசமயம் மீண்டும் தலையெடுக்கலாயிற்று, யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும சைவ. வித்தியாசாலைகளைத் தாபித்தார.

மாணவர்களுக்கு வேண்டிய புதிய தமிழ் நூல்களை வெளியிடவும், பழந்தமிழ் நூல்களை அழிந்து போகாது, அச்சிற் பதிப்பிக்கவும நாவலர் விரும்பினார், அதற்காக ஓர் அச்சுயந்திர சாலையை நிறுவினார்.

பல புதிய நூல்களை எழுதினார். அழியும் நிலையில் இருந்த பழந் தமிழ் நூல்களைத் தேடி இராப்பகல் ஓயாது ஒப்பு நோக்கி வழுவின்றி அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார், சைவத்தையும், தமிழையும் சூழ்ந்த காரிருள் அகன்றது. நாவலர் உள்ளம் களிப்படைந்தது.

இவரது பேச்சு வன்மையை உணர்ந்த திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு ''நாவலர்'' என்ற சிறப்புப் பட்டத்தைக் கொடுத்துக் கௌரவித்தது இவரை அறிஞர்கள் வசனநடை கைவந்த வள்ளலார் எனவும் போற்றினர், தமிழ் வாக்கியங்களுக்கு குறியீடு இட்டு எழுதும் வழக்கத்தைக் கொண்டு வந்தவரும் இவரே.

இவர் இலக்கியம, இலக்கணம். நீதி சைவ சித்தாந்தம், சைவ ஆகமம முதலிய சகல நூல்களிலும் வல்லவராயிருந்தார். இன்னும் சிவபூசை தேவாரதிருவாசக பாராயணம், சைவாசாரம், அருள், ஆண்மை, கொடை முதலியவற்றிலும் சிறந்து விளங்கினார்.

நாவலர் பாலபாடம், சைவவினாவிடை. இலக்கணவினாவிடை, இலக்கணச் சுருக்கம் பெரிய புராணவசனம். திருவிளையாடற் புராண வசனம கந்தபுராண வசனம் போன்ற பல நூலகளை எழுதினார்,

இவர் சைவத்துக்கும். தமிழுக்கும் அளப்பரும் தொண்டு புரிந்து 1879-12-05 ம் திகதி இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

ஆதாரம்
—சைவபோதினி—

நல்லை நகராறுமுக நாவலர்பி றந்திலேற்
செல்லு தமிளெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
எந்து புராணாகமங்களெங் கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கேயறை.

—சி. வை- தாமோதரம்பிள்ளை—

## ஆலயங்களில் நித்ய பூஜை எதற்காக

- ஆறுமுகநாவலர் ஆற்றிய பிரசங்கங்கள் — 1

சிவாலயங்களிலே நித்ய பூஜை முதலியவை காலந்தோறும் தவறாமற் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படுமாயின் உலகத்திலே காலந்தோறும் மழை தவறாமல் பொழியும். நெல் முதலான வளங்கள் பெருகும் ஆரோக்கியம் உண்டாகும். அரச நீதி நடக்கும்.

நித்ய பூஜை முதலியன சிரத்தையோடு விதிப்படி செய்யப்படாதொழியின், உலகத்திலே மழையின்மையும் பஞ்சமும், கொடும் நோய்களும பொய் கொலை, களவு முதலிய தீத்தொழில்களுமே விருத்தியாகும.

இதற்கும் ஆதாரம திருமந்திரப் பாடல்கள் ஆகும

ஆற்றரு நோய்மிக் கவனிமழை யினறிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோவில் களானவை
சாற்றிய பூஜைகள் தப்பிடில் தானே
முன்னவ ன்ார்கோயிற்பூசைகள் முட்டினன்.
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்.
கன்னம் களவு மிகுந்திடுங் காசினி.
என்னரு நந்தி எடுத்துரைத்தானே. திருமந்திரம்

## உயிர் இருக்கும் போதே பெரியவர் பாதம்பணி

- பகவான் பாபா -

ஒருமுறை அசோகச் சக்கரவர்த்தி தன் ஆலோசகர்களுடன் பயணிக்கும்போது வழியில் ஒரு புத்த பிட்சு, வந்தார்.

அசோகர் முன் சென்று தன் சிரம் அவர் பாதத்தில் பட வணங்கினார் பார்த்துக் கொண்டிருந்த மந்திரிக்கு மனவருத்தமாக இருந்தது. மதிப்பு மிகுந்த அசோக சக்கரவர்த்தியின் சிரம சந்நியாசியின் பாதத்தில் படுவதா என்ற நினைப்பு அவருக்கு. மந்திரியாயிருந்தும் குறுகிய மனப்பான்மை அவருக்கு.

கொஞ்சம் பொறுத்து இல்லம் திரும்பியதும், அசோகரிடம் மந்திரி கூறினார்.

''மகாராஜா! எனக்கு மிகவும் வருத்தம்

''எதற்கு'' என்றார் அரசர்.

''அசோகச் சக்கரவர்த்தியின் சிரம் மிகவும் மதிப்பு மிக்க ஒன்று! அப்படிப்பட்ட மதிப்பு மிகுந்தது ஒரு சந்நியாசியின் பாதத்தில் படுவதா''?

அரசர் பதில் சொல்லவில்லை. சிரித்து விட்டுப் போய்விட்டார் சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தார் சக்கரவர்த்தி.

சிலநாள் கழித்து ''மந்திரி இங்கே வா''! என்றார்.

''எனக்கு மூன்று சிரங்கள் தேவை''! என்றார்.

''என்ன வேண்டும் சுவாமி! நான் கட்டாயம் கொண்டு வருகிறேன் என்றார்.

''முதலில் ஆட்டின் தலை, இரண்டாவது புலியின் தலை. மூன்றாவது மனிதனின் தலை'' என்றார் அரசர்.

''இம்மூன்றையும் கொண்டுவா!'' என்றார்.

மந்திரி புறப்பட்டார் எங்கோ போனார் ஒரு ஆட்டின் தலையை வெட்டினார். காட்டிற்குப் போய் ஒரு புலியின் தலையைக் கொண்டு வந்தார். மயானத்துக்குப் போய் ஒரு மனிதனின் தலையை எடுத்து வந்தார். பிறகு அரசனிடம்,

''ராஜா உங்களது ஆணைப்படி இம் மூன்றுசிரசுகளையும் கொண்டு வந்திருக்கிறேன்!' என்றார்.

அரசர் ''மிகவும் நல்லது மூன்றையும் எடுத்துச் சென்று சந்தையில் விற்று வாருங்கள்,! என்றார்.

சந்தைக்குப் போனதும் ஆட்டின் தலை முதலில் விலை போயிற்று புலித்தலையும் கூட அடுத்து விலை போயிற்று. மனிதத்தலை மட்டும் யாரும் வாங்காமல் அப்படியே இருந்தது மந்திரி திரும்பி வந்தார்.

11ம் பக்கம் பார்க்க

தெய்வத்திடம் சரணடைந்தால் தெய்வீக இன்பம்கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்குவம் அடைந்த ஆன்மா, பக்குவமடையாத ஆத்மாவுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதே - திருவெம்பாவை -

''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்ற கூற்றிக்கிணங்க கல்லையும் கரையவைக்கின்ற அவ்வாசகத்திறகு உரியவர் தாம் மணிவாசகர். பல்லவ கால சைவ மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த இவர் திருப்பெருந்துறை குருமணியின் அருள் பெற்று தேனினும் இனிய பாக்களைப் பாடியருளியவர்.

அவற்றுள் ஒன்று அவர் பாடிய திருவெம்பாவைப் பாடலாகும். தைமுதல் ஆனிவரையுள்ள காலப்பகுதி சூரியனுக்குடைய உத்தராயனக் காலப்பகுதியாகும் இக்காலம் தேவர்களிற்கு பகற்பொழுதாகும்.

ஆடிமுதல் மார்கழி வரையானகாலப்பகுதி சூரியனுடைய தஷிணாயனக் காலப்பகுதியாகும் இக்காலப்பகுதி தேவர்களிற்கு இரவுப் பொழுதாகும்.

அதிலும் அதிகாலை நான்கு மணியிலிருந்து ஆறுமணிவரையான காலப்பகுதி பிரம்ம முகூர்த்தமாகும். கடவுள் வழிபாட்டிற்குச் சிறந்த நேரம இதுவாகும். அதேபோன்று தேவர்களுடைய நாளில் மார்கழி முழுவதும் பிரமம முகூர்த்தமாகும். எனவே மாதங்களில் மார்கழி மாதம் சிறப்பாக கடவுள் வழிபாட்டிற்குரியதாகும்

அக்காலப்பகுதியில் சைவர்கள் மணிவாசகரது திருவெம்பாவைப் பாடல்களாற் சிவனைத் துதிப்பர். அவ்வாறே வைஷ்ணவர்கள் ஆண்டாள் பாடிய திருப்பாவையால் விஷ்ணுவை ஏற்றித் துதிப்பர்.

திருவெம்பாவைப் பாடல்கள் யாவும் உயர்ந்த தத்துவ விளக்கத்தைக் கொண்டவை அதாவது மார்கழி மாதப்பகுதியில் பெண்கள் தாம் மனம் விரும்பிய மணவாளரைப் பெற சிவன் அருளை நாடி நிற்கின்றனர். சில பெண்கள் கூடி தங்கள் தோழிப் பெண்களின் வீடுகளுக்குச்சென்று அவர்களைத் துயில் எழுப்பி பின் எல்லோரும். சேர்ந்து பொய்கையில் நீராடி சிவனைப் போற்றித் துதிப்பர்-

பக்குவம் அடைந்த ஆன்மா பக்குவம் அடையாத ஆன்மாவிறகு விழிப்புணர்ச்சி ஊட்டி தங்களின் இலட்சியமாகிய பரமாத்மாவை அடைவதற்கு முயற்சி எடுக்கின்ற தத்துவப் பொருளை பின்னணியாகக் கொண்டமைந்தது இப்பாடல் அந்த வகையில் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாகிய இறைவனைப் பற்றிப் பாடியும் தனது உறக்க நிலையிலிருந்து விழிப்படையாத ஆன்மாவை எழுப்புவதாக பின் வரும் பாடல் விளக்கி நிற்கின்றது.

★ பா. பாலகுமாரி ★
உடுவில் மகளிர் கல்லூரி
ஆசிரியை

''ஆதியும் அந்தமும் இல்லா அரும பெரும் சோதியை யாம்பாடக்கேட்டேயும் வாள்தடம்கண் மாதே வளருதியோவன் செவியோ நின் செவி தான்'' என்கின்றார்.

ஞான மார்க்கத்தில் செல்கின்றவர்களுக்கு விளங்காத இறைத்துவம பக்தி மார்க்கத்தில் போகின்றவர்களுக்கு இலகுவாக விளங்குகின்றது ஞானியருக்கும் யோகிகளுக்கும் எட்டாத கிருஷ்ண பரமாத்மா கோபியர்களின் பக்தி வலையில் சிக்குண்டார். இதனையே மணிவாசகர் இறைவனை ,.பக்தி வலையில் படுவான் காண்' என்கின்றார்.

அந்த வகையில் அறிவில் சிறந்த விண்ணோர்களே பரமனைப்போற்றத் தாங்கள் தகுதி அற்றவர் என்றுதயங்கி பின்வாங்குகின்ற வேளை அவனே நம்மை ஆட்கொள்வதற்காக வலிய வந்து கொண்டிருக்கிறான என்பதை ''விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர்பாதம் தந்தருள வந்தருளும் தேசன்'' என்ற அடியும் ''தானே வந்து எம்மை தலையளித்து ஆட்கொண்டருளும்'' என்ற அடியும் மிகத்தெளிவாக விளக்குகின்றன.

ஆத்மா இயல்பாகவே அறிவுடையது ஆயினும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மலங்களினாலே அதன் அறிவு மறைக்கப்பட்டிருப்பதால் அது தன்னை உணர முடியாதிருப்பதோடு பரமாத்மாவையும் உணர முடியாதிருக்கின்றது. இதனால் அதன் அறிவு மறைக்கப்பட்ட நிலையில் நிலையற்றவற்றை நிலையானது என நம்பி தன் நிலைலயை இழக்கின்றது.

அப்படிப்பட்ட ஆத்மா மணிவாசகரது பார்வையில் உறங்கிக்கொண்டிருக்கின்றது, அது மட்டுமல்ல அவ்வாறு இது இருப்பதால் தான் அடைய வேண்டிய இலட்சியப் பாதையை அடையாமல் பொன்போன்ற காலத்தை மண்ணாக்குகிறது இதனைப் பின்வரும் பாடல் கூறுகின்றது-

''கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப்பொருளை கண்ணுக்கு இனியானைப் பாடி என்கின்றார் அப்படி உணர்த்தியும உணராத ஆன்மாவை ''சிவனே சிவனே என்று ஓலமிடினும உணராய் உணராய் காண்'' என்கின்றார், ஆயிரம் பேருக்கு ஒருவர் தாம் விஞ்ஞானியாகின்றார்கள். அவ்வாறே எல்லா ஆத்மாக்களும் இறைவனை உணருவதில்லை. பக்குவமடைந்த ஆன்மா மட்டுமே இறைவனை உணருகின்றது.

தொடரும்

3ம் பக்கத் தொடர்ச்சி
### எல்லா மதங்களும் ...

### கத்தோலிக்கர்கள்

இயேசு கிறிஸ்துவின் புகழ் எல்லாத் திசைகளிலும் பரவ ஆரம்பித்தது. இப்படியிருக்கையில் இரண்டு விதமான கொள்கை கொண்டவர் தோன்ற ஆரம்பித்தனர் முதலாமவர் ரோமன் கத்தோலிககர்கள. இரண்டாவது பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்ததால் அவர்கள் 'புரொடெஸ்டன்ட்கள்' என்று அழைக்கப்பட்டனர். யூதர்கள் இந்த இரண்டு வருப்பினராகப் பிரிந்தனர். கத்தோலிக்கர்கள், புரொடெஸ்டென்ட்கள்,

இந்தப் பேதமும் அதனால் ஏற்படும். வெறுப்பும், நாளாக நாளாக படிப்படியாய்ப் பெருகிப் பேரயின' இதனால் தான் இயேசுவுக்கும் ஆபத்துகள் ஏற்பட்டன. ஜெருசலேத்தில் இருந்த யூதர்கள் யேசுவை உள்ளேவர அனுமதிககவில்லை.

இவ்வாறாக மத சம்பந்தமான கலகங்களும் சண்டைகளும் நாளடைவில் அதிகமாகி விட்டன. அங்கே 250க்கும் மேற்பட்ட சித்தாந்தப் பிரிவுகள் காணப்பட்டன, அவைசில தேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டு பரவின.

யூதர்களிடையே தோன்றிய இந்தப் பிரிவுகளினால் அவர்கள் இயேசுவைத் துன்புறுத்தவும் செய்தனர்.

ஜீசஸ் மதங்களிடையே ஒற்றுமை வேண்டுமென்பதற்காக தன் உயிரையே தியாகம் செய்தார். இத்தகைய தத்துவங்களைப்புரிந்துகொள்ளாமல் நாங்கள் கிறிஸ்தவர்கள் அவர்கள் மூஸ்லீம்கள் இவர்கள் ஹிந்துக்கள்; பார்ஸிகள் என்று பேதம் பார்த்து கடைசியில் மனிதத்தன்மையை நிர்மூலம் செய்து கொள்கிறார்கள்

இந்நாளில் மனிதர்கள் சான்றோர்களின் குணத்தால் உயர்ந்த பெரியவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனரே தவிர அவரது அறிவுரைகளை நடைமுறைப் படுத்துவதில்லை

பிறந்தநாள் கொண்டாடுவது பெரிதில்லை அவர்களது உபதேசங்களை. வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும்.

8ம் பக்கத் தொடர்ச்சி
### பாலன் தேடிய ...

கையை கொண்டாடவுள்ளனர் ஆனால் அவர்களிடம் பாலன் பிறந்ததின் நோக்கம் காணப்படவில்லை. அவ்வாறாயின் அன்று போல் இன்றும் சத்திரம் இன்றி பாலன் தான் பிறக்க மாட்டுக் குடிலை தேடி போக வேண்டியிருக்கும்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஏழைகள் அனாதைகள் போன்றோரை ஆதரிக்கவும் ஆறுதல் அளிக்கவுமே தேவ பாலன் புவியில் வந்தார். அந் நாளை நினைவு கூரும் நாம் அவரது எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும்.

அப்போது தான் பாலன் எமது உள்ளங்களில் பிறப்பார் பாலன் பிறப்பில் நாம் பூரிப்படைவது புதிய உடைகளை அணிவதாலும் விருந்துகள் பண்ணுவதாலும் அல்ல எம்மால் இயன்றவரை அந்நாளில் பிறரையும் சந்தோஷப்படுத்த முயல வேண்டும். அவ்வாறு செய்யும் போது பாலன பிறப்பின் நோக்கங்கள் நிறை வேற்றப்படும். எனவே பாலன் பிறக்கும் பரிசுத்தமான சத்திரமாக ஆயத்தப்படுத்துங்கள்.

10ம் பக்கத் தொடர்ச்சி
### உயிர் இருக்கும் ...

சக்கரவர்த்திகளே! இந்தத் தலையை யாரும் வாங்கல்விலை என்றார்.

அரசன், ''அப்படியா! இதை இனாமாக்கொடுத்துவிடு' என்றார் அப்போதும் கூட எவரும் வாங்க மறுத்தனர். பிறகு திரும்பி வந்து ''மகாராஜா! இலவசமாகக் கொடுத்தும் யாரும் வாங்க மறுகின்றனர்.

அப்போது அரசர் கூறினார்"

''மந்திரி உயிர் இருக்கும் வரைதான் இந்தத் தலைக்கு மதிப்பு! ஜீவன் போன பிறகு அதன் மதிப்பும் போய்விடுகிறது ஆகவே மதிப்பு இருக்கும்போதே பெரியவர்கள் பாதம் பணிந்து அந்தப் புனிதத்தை பெற்றுக் கொள்.

தேக உணர்வு உள்ளவரை பிரம்மத்தை உணரமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய வருடத்தில் இதயங்களை அன்பு மயமாக்கிக் கொள்ளுங்கள்

**- பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா -**

## அன்பின் வடிவங்களே!

### பிரேமை

உலகில் நிகழ்வுகள் அனைத்துக்கும் மூல காரணம் பிரேமையே. பிரேமைக்கு மிஞ்சிய செல்வம் இவ்வுலகில் வேறெதுவும் இல்லை உலகியலாக நீங்கள் வாங்கும் பொருளின் மதிப்பு நீங்கள் கொடுக்கும் பணத்தின் மதிப்பைவிடக் குறைவானது.

எதையாவது வாங்க வேண்டுமெனில் முதலில் பணத்தைக் கொடுக்க வேண்டும் அதன் பின்னரே அந்தப் பொருள் உங்களுக்குக் கிடைக்கிறது பணத்தின் மூலம் இவ்வுலகில் நீங்கள் எதையும் வாங்கலாம். வாங்கும் பொருளல்ல முக்கியமானது. வாங்கக்கொடுக்கும் தனமே முக்கியமானது

அதே போலத்தான் மனிதனின் சுகம், துக்கம் ஆனந்தம் எல்லாம் பிரேமையின் மூலமாகத்தான் அவனுக்குக் கிடைக்கிறது அன்பின்றி எக்காலமும் மகிழ்ச்சியுடன் இருக்க இயலாது.

ஆகவே மனிதனின் முக்கியமான செல்வம் பிரேமை என்கிற தனமே இந்தத் தனத்தை ஒவ்வொரு மனிதனும் சம்பாதிக்க வேண்டும். இச்செல்வம் உடையவன் நிரந்தரமாக ஆனந்தத்துடன் நிலைத்து வாழ்கிறான்.

### புதிதான விநாடிகள்

புதிய வருடமும் தொடர்ந்து வரும் புதிய மாதங்களும் நமக்கு ஆனந்தத்தையோ துக்கத்தையோ அன்றி கஷ்டத்தையோ கொண்டு வருபவையல்ல ஒவ்வொரு கணமும் புதியதானதே ஒவ்வொரு விநாடியும் புதியது.

விநாடிகள் இல்லையெனில் நிமிஷங்கள் இல்லை நிமிஷங்கள் இல்லையெனில் மணிகள் ஏற்படுவதில்லை. மணிகளின்றி நாட்களோ, நாட்களின்றி மாதங்களோ, உருவாவதில்லை. மாதங்களின்றி வருடங்கள் ஏது? ஆகவே இக்கணக்குப்படி வருடம் முழுவதும் ஒவ்வொரு விநாடியையும் சார்ந்தே இருக்கிறது.

ஆகவே ஒவ்வொரு விநாடியையும் பவித்ரமானதாக அனுபவிக்கும் போது தான் இவ்வருடம் புதுவருடமாக அமையும் ஒவ்வொரு கணத்திலும் நாம் செய்யும் செயல்களின் பலன் தான் வருடத்தின் பலனாக அமைகிறது,

### இறைவன் ஒரு தபாற்காரன் போன்றவர்

தபாற்காரன் இருக்கிறார். ஒவ்வொரு வீட்டிக்கும் அந்த அந்த விலாசத்தைச் சேர்ந்தவரிடம் கடிதத்தை ஒப்படைக்கிறார். ஒரு வீட்டில் கடிதத்தைப் படித்து விட்டு 'ஓ' வென்று அழுகிறார்கள். மற்றொரு வீட்டில் கடிதத்தை வாங்கியதும் மகிழ்ச்சியுடன் புன்னகைக்கிறார்கள் அவர்கள் அழுவதற்கும் சிரித்ததற்கும் தபால்காரரா காரணம்? இல்லை கடிதத்தில் உள்ள விசயங்களே அழுகைக்கும் மகிழ்ச்சிக்கும் மூலகாரணம்.

முதல் வீட்டில் துக்க செய்தியும் இரண்டாவது வீட்டில் ஆனந்தத்தை தரக்கூடிய விஷயமும் கடிதத்தில் காணப்பட்டன. அதனால் தான் துக்கமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன அதே போல் இறைவனும் ஒரு தபாற்காரனைப் போல் சுகமும் துக்கமும் நிரம்பிய 'கவர்' களை ஒவ்வொருவரிடமும் அளிக்கிறார்

புனிதமான வாழ்க்கை வாழ வேண்டுமெனில் உங்கள் பிறவி புனிதமாக மாறவேண்டுமென்றால் நீங்கள் புனிதச் செயல்களைச் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மனிதன் மனம் மாறுவதைப் பொறுத்தே உலகின் நன்மையும் தீமையும் அமைகின்றன தனிமனிதன் மாறினால் தான் சமுதாயத்திலும் மாற்றங்கள் நல்லனவாக மாறக்கூடும்

நாம் அனைவரும் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவோம் ஒன்றாகப் பணிசெய்து இசைவாகப் பழகுவோம். நம்முடைய அறிவை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டு வாழ்வோம்,

இது எப்போது சாத்தியமாகும் நம்மிடையே எந்த ஒரு வேற்றுமையும் இல்லாத போது தான் நம்மால் இணைந்து பழகி வாழ முடியும் ஆகவே எந்த ஒரு மனிதனும் கருத்து வேற்றுமைக்கு இடங்கொடாது பதட்டத்துக்கும் அமைதியின்மைக்கும் நேரம் ஒதுக்காது அமைதியுடன் வாழ வேண்டும்.

## புதுவருடச் சிறப்புக் கட்டுரை

இத்தகைய கலாசாரத்தை புரிந்து கொள்ள வேண்டுமென்றோ தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும என்றோ யாரும் பிரயாசைப்படுவது இல்லை,

பூஜை செய்வதும், ஜபம்செய்வதும், தியானம் செய்வதுமே முக்கியமானதென்று மக்கள் நினைக்கிறார்கள். இந்த ஜபமும் தியானமும் எதைக் குறித்து நாம் செய்கிறோம் என்ற சத்தியத்தை புரிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை.

தனது வாழ்க்கையின் நோக்கம் என்னவென்பதை யாரும் புரிந்து கொள்வதில்லை, வாழ்க்கையின் இலக்கு என்ன என்று தெரிந்து கொள்ளாமல் எத்தனை ஆன்மீக சாதனைகள் செய்தாலும் அதனால் பயன் இல்லை

### சாதனையின் இலக்கு

இத்தனை சாதனைகளின் இலக்கு முழுவதும் பிரேமதத்துவம் ஒன்று மட்டுமே அதை அடையும் போது தான் சாதனைகளின் பலன் கிடைத்ததாக ஆகும். எந்த நிலையிலும் நாம் பிரேமையை உதறிவிடக் கூடாது பிரேமையை மாற்றிக்கொள்ளக்கூடாது.

ஒவ்வொரு செயலிலும் அன்பினை அனுபவிக்க வேண்டும். அன்பிருக்கும் இடத்தில் வெறுப்பிற்கு இடமே கிடையாது. எங்கு அன்பிருக்கிறதோ அங்கு துன்பம் என்பது நெருங்காது.

அன்பிருக்கும் இடத்தில் துயரமும் காணப்படாது. இத்தகைய பவித்ரமான பிரேமை தத்துவத்தை நாம் சரியாகப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும். எல்லாச் சாதனைகளின், முழு முதல் இலக்கும், நோக்கமும் அன்பு மட்டுமே.

மனிதன் இத்தகைய அன்பை அதிகமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பிறந்தபிறவியின் பலனை அடைய முடியும். எத்தனையோ வருடங்கள் கழிந்து விட்டன. வருடங்கள் செல்லச் செல்ல நம் வயது தான் அதிகரிக்கிறது ஆனால் நம் உள்ளுணர்வுகள் மட்டும் மாறுவதில்லை.

உணர்வுகள் மேன்மையானதாக இல்லை. உள்ளுணர்வுகள் நல்ல முறையில் வளர வேண்டும் உன்னதமான சிந்தனைதான் ஞானத்துக்கு சமமாகின்றன. தூய எண்ணங்களின்றி ஞானம் எங்ஙனம் கிடைக்கும்.

### புனிதமானபாதை

மாணவர்களானாலும், இளைஞர்களானாலும் புனிதமான பாதையில் செல்ல வேண்டும் சமுதாயத்தில் நல்ல பெயர் எடுக்க வேண்டும்.

அனைவரையும் கவர்ந்திழுக்க வேண்டும். அனைவரின் நன்மையையும் மனதில் கொண்டு செயலாற்ற வேண்டும். இது முதல் குணம்.

முழுமையான தூய குணங்களும் ஒழுக்கமும் உன்னிடத்தில் காணப்பட வேண்டும். இது இரண்டாவது குணம் எல்லாவிதமான அறிவும் பெற வேண்டும். இது மூன்றாவது குணம்

உலகின் நன்மையைக் கோருவதும் சகல சத்குணங்களையும் சம்பாதித்துக் கொள்வதும். சாவ ஞானத்தைப் பெறுவதும் மனிதனுடைய மூன்று முக்கிய குறிக்கோளாக விளங்க வேண்டும் இந்த மூன்றையும் அடைந்தவர் எவரோ அவர் இம்மூவுலகையும் வெல்ல முடியும். இறைவனுக்கு அர்ப்பணம் செய்யக்கூடியது இந்த மூன்று குணங்கள் மட்டுமே இந்த மூன்று குணங்களுடன் இவ்வுலகில் வாழ்க்கை நடத்த வேண்டும்.

### புதியவருடம் 1999

புதிய வருடம் 1999 ஆரம்பமாகிறது. இன்றில் இருந்து உங்கள் இதயங்களைப் பிரேமை மயமாக மாற்றிக் கொள்ளுங்கள் உலகியலான பிரேமை மிகவும் மாசடைந்துள்ளது. அதனால் தான் உலகம் முழுவதுமே மாசு நிறைந்து காணப்படுகிறது ஏனெனில் தீய உள்ளுணர்வும் தவறான பார்வைகளுமே இவ்வுலகின் தீமைகளுக்குக் காரணம். கண்களில் என்ன வண்ணக்கண்ணாடியைப் போட்டிருக்கிறீர்களோ அவ்வண்ணமே வெளியே தெரிகிறது. அதனால் ஒவ்வொருவரும் பிரேமை என்கிற வண்ணக் கண்ணாடியை அணிந்து கொள்ள வேண்டும்.

இன்றிலிருந்து ஒவ்வொரு மனிதனும் பிரேமை என்ற தெய்வீக குணத்தை வளர்த்துக் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு தினமும் பத்துப் பேருடனாவது அன்பு காட்டி அன்புடன் நடத்தி அன்பைப் பகிர்ந்து கொண்டு வாருங்கள் இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் நடந்து கொண்டால் உலகில் நல்ல மாற்றம் ஏற்படும்.

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தினால் கே கே. எஸ். வீதி, பூநாறிமரத்தடி, ஸ்ரீ சாயி அச்சகத்தில் அச்சிடப்பெற்று 05 - 12 - 1998 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org